**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க.எண்.3918/ஆ2/2024, நாள். 27.12.2024**

•••••

பொருள் பள்ளிக் கல்வி – வேலூர் மாவட்டம் – 2023–2024 SC / ST ப்ரி மெட்ரிக் மற்றும் போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை மற்றும் 2023–2024 SC / ST பெண்கல்வி ஊக்கத் தொகை – வங்கி கணக்குடன் ஆதார் சீடிங் (Aadhar Seeding ) செய்ய கோருதல் – சார்பு

பார்வை
1. வேலூர் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் கடித ந.க.எண்.கே6/185/ 2024, நாள். 03.12.2024
2. இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடித நாள்.13.12.2024

•••••

வேலூர் மாவட்டம், 2023–2024 SC / ST ப்ரி மெட்ரிக் மற்றும் போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை மற்றும் SC / ST பெண்கல்வி ஊக்கத் தொகை சார்பாக மாணவர்களுக்கு கீழ்காணும் காரணங்களால் கல்வி உதவித்தொகை மற்றும் பெண்கல்வி ஊக்கத் தொகை விடுவிக்க இயலாமல் உள்ளது.

1. வங்கி கணக்கு துவங்காமல் இருத்தல்
2. வங்கி கணக்கில் போதிய இருப்பு இல்லாமல் இருத்தல்
3. இதுவரையில் ஆதார் எண் பெறப்படாமல் இருத்தல்
4. வங்கி கணக்கு துவங்கப்பட்டு ஆதாருடன் இணைக்கப்படாமல் இருத்தல்

வங்கி கணக்குடன் ஆதார் சீடிங் செய்யப்படாத மாணவர்களின் பெயர் பட்டியல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள Google Sheet–ல் கொடுக்கப்பட்டுள்ளது. எனவே சார்ந்த பள்ளிகளின் தலைமையாசிரியர்கள் / முதல்வர்கள் சம்மந்தப்பட்ட மாணவர்கள் மற்றும் அவர்களின் பெற்றோர்களுக்கு விவரங்கள் தெரிவித்து, ஆதார் எண் பெறப்படாத மாணவர்கள் உடனடியாக பெற்று மாணவரின் வங்கி புத்தக கணக்கு எண் மற்றும் ஆதார் அட்டையுடன் சார்ந்த வங்கிக்கு சென்று 30.12.2024 –க்குள் வங்கி கணக்குடன் ஆதார் சீடிங் செய்வதற்கான உரிய நடவடிக்கை மேற்கொண்டு ஆதார் சீடிங் செய்யப்பட்ட விவரத்தினை கொடுக்கப்பட்டுள்ள Google Sheet–ல் தவறாமல் பதிவுகள் மேற்கொள்ளுமாறு சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர்கள் / முதல்வர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு –
https://docs.google.com/spreadsheets/d/1–NC3HJxW7vlyHDYcSOMnm7TQRUK7WbCs/edit?usp=drivesdk&ouid=100635109491335324562&rtpof=true&sd=true

//ஒப்பம்//
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்
சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர்கள் / முதல்வர்கள்,
வேலூர் மாவட்டம், (இவ்வலுவலக இணையதளம் மூலமாக)
நகல்–
மாவட்டக் கல்வி அலுவலர்,
(இடைநிலை / தொடக்கக் கல்வி / தனியார் பள்ளிகள்)
வேலூர் மாவட்டம் (தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு
(இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)